Registered as a Newspaper

புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர்செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸு வைகாசி மீ 27 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 12 (10 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 167

# இராணுவத்தின் பிடி தளர்ந்தது

## தெல்லிப்பளையில் --- பின்வாங்கல்

## அச்சுவேலியில் --- வாபஸ்

— உதயன் செய்தியாளர்கள்; சே. எஸ். ராஜு, ஆர். ஞானசுந்தரம், கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஜூன் 10

**யாழ் குடாநாட்டில் தனது நிலையை இறுக்கிப் பிடிக்க முனைந்த இராணுவம் தற்போது பல இடங்களில் தனது பிடியை நழுவ விட்டிருக்கிறது,**

**கடந்த சனிக்கிழமை அச்சுவேலி பகுதியைப் பிடித்த படையினர் நேற்று செவ்வாய்க்கிழமை அங்கிருந்து வாபஸாகினர்.**

**தெல்லிப்பளை மற்றும் கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் நேற்று மேலும் முன்னேற முயற்சித்த படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர். அதனால் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.**

கடந்த சனிக்கிழமை அச்சுவேலிக்கு வந்து இரண்டு பாடசாலைகளிலும், இரண்டு தனியார் மாடி வீடுகளிலும் நிலை கொண்டிருந்த இராணுவம் நேற்று தொண்டமானறு முகாம் பக்கமாகவும், பலாலி முகாமுக்கும் பின் நோக்கிச் சென்றுள்ளது.

இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வேளை படையினர் வளலாய் வெளியிலேயே நிலை கொண்டிருந்தனர்.

இராணுவத்தினர் கடந்த நான்கு நாட்களாக அச்சுவேலி பஸ்நிலையப் பகுதியிலும், நாவற்காடு வரையான பகுதியிலும் வேலிகளை வெட்டியும்; மதில்களை இடித்தும் சென்று தேடுதல் நடவடிக்கையினை மேற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

10–06–1987
புதன்கிழமை

சுபநேரம்:–
4.52 முதல் 6.22 வரை
ராகுகாலம்:–
11.52 முதல் 1.22 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகள்

மதுரை, ஜூன் 9

43 இலங்கைத் தமிழ் அகதிகள் கடந்த திங்களன்று வேதாரண்யம் கரையைக் கடந்து வந்தடைந்தனர்.

இன்னும் பல தமிழ் அகதிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகின்றனர் என்று அவர்கள் தெரிவித்தனர். (இ–எ)

### ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 10

இந்தியாவுக்கு எதிராகப் போராட எம்மிடம் பலம் இல்லை. வருங்காலத்திலும் அந்தப் பலம் இருக்காது.

ஓர் இந்தியனோ, இலங்கையனோதுன்புறுவதை நான் விரும்பவில்லை.

– இப்படி ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா நேற்று அரச நாடாளுமன்றக்குழுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

ஜே. ஆர்.

### மட்டுநகரில் ஹர்த்தால்

கொழும்பு, ஜூன் 10

மட்டக்களப்பு நகரில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பில் ஆறு பொதுமக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதை ஆட்சேபித்து இந்த ஹர்த்தால் நடத்தப்பட்டது. [உ–எ]

### முச்சந்தி முரளி

போர் என்றால் உப்பி டித்தான் முதல் நாள் தோல்வி அடுத்த நாள் வெற்றி. உது தெரியாமல் எங்கடை சனம் வீணு பதற்றம் அடையுதுகளே! ஏனோ தெரியயில்லை.

### சிங்கராயரை பிரதி அமைச்சர் பார்த்தார்

கொழும்பு, ஜூன் 10

வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டுள்ள வண. பிதா ஆபரணம் சிங்கராயரை பிரதி நீதி அமைச்சர் ஷெல்டன் ரணராஜா சென்று பார்த்தார்.

இத்தகவலை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ரி. கந்தரலிங்கத்துக்கு, வண. சிங்கராயரின் சட்டத்தரணி பாலா தம்பு, நீதிமன்றத்தில் வைத்துத் தெரிவித்தார். (இ–எ)

### ப. நோ. கூ. சங்கங்களுக்கு மாவிநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ் குடாநாட்டு ப. நோ. கூ. சங்கங்களுக்கு வவுனியாவிலிருந்து மா பெறப்பட்டுள்ளது.

நல்லூர், யாழ்ப்பாணம், நீர்வேலி, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி சங்கங்கள் வவுனியா உணவுத் திணைக்கள களஞ்யெத்திலிருந்து மாவைப் பெற்றுக் கொண்டனர். (இ–எ)

### ஹெலி நோட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலையும் ஹெலிக்கொப்டர் ஒன்றும் சீ பிளேனும் சுற்றி வட்டமிட்டன. (உ–10)

## தஞ்சாவூரில் அவசர அவசரமாக புதிய விமானத்தளம்

கொழும்பு, ஜூன் 10

தஞ்சாவூரில் பாவிக்கப்படாது கைவிடப்பட்டுள்ள விமானத் தளம் ஒன்றுக்கு வானொலி தொடர்புச் சாதனங்கள் அவசரமாகப் பொருத்தப்பட்டு வருகின்றன.

விமானங்களுக்கு தேவையான எரிபொருளும் சேமித்து வைக்கப்படுகின்றன.

– இப்படி ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்திருப்பதாக இலங்கை வானொலி நேற்று

(4ஆம் பக்கம் பார்க்க)

**குட்டு வெளியாகும் என்ற பயத்தினால்**

## ஐ. நாவில் எழுப்பும் முயற்சியை இலங்கை கைவிட்டது!

வாஷிங்டன், ஜூன் 10

இலங்கையின் ஆகாய எல்லைக்குள்இந்திய விமானங்கள் ஊடுருவிய செயலைவிசாரிக்கஐ. நா. பாதுகாப்புச் சபையைக் கூட்டும் முயற்சியை இலங்கை அரசு கைவிட்டு விட்டது.

–இப்படி அரசியல் அவதானிகள் தெரிவித்தார்கள்.

ஊடுருவல் பற்றிய விஷயத்தை விவாதிக்க பாதுகாப்புச் சபையைக் கூட்டும்படி இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக முறையிடவில்லை என்று ஐ. நா. வட்டாரங்கள் தெரிவித்தன.

அப்படி முறையிட்டால் தமிழர்களின் மனித உரிமைகளை மீறிய தங்கள் செயல்கள் வெளிப்பட்டு விடுமோ என்ற அச்சம் காரணமாக பாதுகாப்புச் சபையைக் கூட்டும் முயற்சியை இலங்கை கைவிட்டிருக்கலாம் என்று அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ–எ)

## 'சார்க்'கில் கிளப்பினால் இந்தியா எதிர்க்கும்

புதுடில்லி, ஜூன் 9

விமானங்கள் மூலம் யாழ் குடா நாட்டில் உணவுப் பொதிகள் போட்ட செயலை சார்க் அமைப்பின் வெளிவிவகார அமைச்சர் மட்டமாநாட்டில் இலங்கையோ பாகிஸ்தானோ எழுப்பினால் அதை இந்திய அரசு கடுமையாக எதிர்க்கும்.

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவது பற்றிய பேச்சுக்களை அம்மாநாட்டில் இலங்கை எழுப்பினால் அதை இந்தியா வரவேற்கும் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. செயலருடன் இந்தியப் பிரதிநிதி 3ஆவது முறை சந்திப்பு

வாஷிங்டன், ஜூன் 9

இந்தியாவின் ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதி திரு. சி. ஆர். ஹரிகேன் ஒரு வாரத்தில் மூன்றாவது தடவையாக ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி. குயிலரைச் சந்தித்து இலங்கை நிலைமை பற்றி விளக்கினார்.

விமானமூலம் உணவுப் பொதிகளை யாழ் குடா நாட்டுக்கு போடவேண்டிய சூழ்நிலை பற்றி இந்தியப் பிரதிநிதி பொதுச் செயலாளரிடம் எடுத்துச் சொன்னார்.

இந்தியப் பிரதிநிதியின் மூன்றாவது சந்திப்பு திங்கட்கிழமை இடம் பெற்றது. (உ–எ)

## ரணில் பாகிஸ்தானில்

இஸ்லாமாபாத், ஜூன் 10

கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நான்குநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றிருக்கின்றார்.

இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்கள் மத்தியில் அவர் பேசுகையில் இலங்கைக்கு பாகிஸ்தான் அரசு தரும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பாகிஸ்தான் தலைவர்களுடன் மோசமடைந்து வரும் இந்திய – இலங்கை உறவுகள் பற்றியும் கல்வி அமைச்சர் ரணில் விக்கிரசிங்க பேச்சுக்கள் நடத்தினார். (உ–எ)

## பெரும் தாக்குதலுக்கு போராளிகள் முஸ்தீபு

### புலிகள் இயக்கப் பிரமுகர் தகவல்

சென்னை, ஜூன் 10

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மீது பெரும் தாக்குதல் நடத்துவதற்கு போராளிகள் தயாராகி வருகின்றனர் என்று தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

– இப்படி இந்திய வானொலி நேற்று மாலை அறிவித்தது.

யாழ் குடாவில் இனி இராணுவம் முன்னேறுவது எளிதாக இராது.

ஆங்காங்கே இராணுவத்துடன் போரிட்டு அதன் முன்னேற்றத்தைத் தடுத்து வரும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் விரைவில் இராணுவத்தின் மீது மிகப் பெரிய தாக்குதலை நடத்தவிருக்கின்றனர்.

இலங்கைப் படைகள் வடமராட்சியைப் பிடித்துக்கொண்டு விட்டன - என்றாலும் அவை இங்கும் அங்குமாகப் பரவி இருப்பதால் அவை போராளிகளின் தாக்குதலைச் சமாளிக்க இயலாது.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் ஒருவர் சொன்னார் என்று இந்திய வானொலி நேற்று அறிவித்தது. (உ–எ)

## இந்தியாவுடன் போராட எம்மிடம் பலம் இல்லை

இந்திய விமானங்கள் யாழ் குடாநாட்டில் உணவுப் பொதிகளைப் போட்டபின்னர் நேற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## டிக்ஸிற் வாசஸ்தலம் முன் சத்தியாக்கிரகம்

கொழும்பு, ஜூன் 10

ஆயிரக் கணக்கானோர் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் ஊர்வலமாகச் சென்று இந்தியத் தூதரகத்தின் வாசஸ்தலத்திற்கு முன்னால் சத்தியாக்கிரகம் மேற்கொண்டனர்.

இலங்கை மீது இந்திய ஆக்கிரமிப்பு நடத்தியதாகத் தெரிவித்தும் அதனை எதிர்த்தும் மகா சங்கத்தினரும் சிங்களப் பொதுமக்களும் இந்தச் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டனர்.

தார்மீக பலத்தால் இந்தியாவின் ஆக்கிரமிப்பு எண்ணத்தை மாற்றுவதற்காகவே இச்சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்பட்டதாம்.

பின்னர் இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. (உ–எ)

## புதுடில்லியில் இன்று மிக முக்கிய கூட்டம்

புதுடில்லி, ஜூன் 10

இலங்கை இனப்பிரச்சினைபற்றிய முக்கியபேச்சுக்கள் இன்று புதன்கிழமை புதுடில்லியில் நடைபெறும்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் அழைப்பை ஏற்று தமிழ்நாட்டு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் இன்று காலை விமான மூலம் புதுடில்லி செல்கின்றார்.

அவருடன் உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் செல்கிறார்.

திங்கள் இரவே திரு. எம். ஜி. இராமச்சந்திரன் புதுடில்லி செல்வதாக இருந்தது. விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக நேற்றுக் காலை செல்ல தட்டமிடப்பட்டது.

பின்னர் இன்று புதன்காலையே புதுடில்லி செல்வார் என்று நேற்று சென்னையில் அறிவிக்கப்பட்டது.

இதனிடையில் பாண்டிச்சேரி மாநில முதலமைச்சர் ஜனப். பாரூக் மரைக்காயரையும் புது

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பீஹாரின் நிதி கையளிப்பு

புதுடில்லி, ஜூன் 9

பீஹார் மாநில அரசு, இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்காக அனுமதித்த ஐம்பது லட்சம் ரூபாவுக்கான காசோலையை நேற்று இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்தது. (இ–எ)

**4000 தமிழ் இளைஞர்கள் அரச தடுப்பு முகாமில்**

## வடமராட்சி ஒரு தலைமுறையையே இழந்துள்ளது

### சண்டே டைம்ஸ் தகவல்

லண்டன், ஜூன் 9

அரசு தடுப்பு முகாம் ஒன்றில் வடமராட்சியைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் முட்கம்பிவேலிக்குப் பின்னால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அப்பகுதி மக்கள் ஒரு தலைமுறையையே இழந்துவிட்டனர்.

இப்படி லண்டன் சண்டே டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

நேரிற் கண்ட காட்சிகளை ஆதாரம் காட்டி சண்டே டைம்ஸ் இச்செய்தியை வெளியிட்டது.

வல்வெட்டித்துறை மற்றும் பகுதிகளைச் சுற்றி வளைத்த இலங்கை அரசுப்படையினர் சுமார் பத்தாயிரம் தமிழரைக் கைது செய்தனர்.

இவர்களில் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டோரைத் தடுப்புமுகாமில் தடுத்து வைத்திருக்கின்றனர்.

இதனால் அப்பகுதி ஒரு தலைமுறையையே இழந்து நிற்கின்றது.

படையினர் பல இடங்களில் ஆண், பெண் என்ற பேதம் இன்றி அனைவரையும் சுட்டுத் தள்ளினர்.

வல்வெட்டித்துறைப் பட்டினம் இரண்டு நாளாகத் தொடர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராணுவ முகாம் விஸ்தரிப்பால்

# 5 வீடமைப்புத்திட்டங்களிலுள்ள 227 குடும்பங்கள் வீடிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன்10
யாழ் குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களின் விஸ்தரிப்பால் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ் மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

நாவற்குழி, குருநகர், பலாலி, தொண்டமனறு, மயிலிட்டி, மடத்துவெளி பகுதிகளிலுள்ள கிராமிய வீடமைப்புத் திட்டங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

நாவற்குழி குடியேற்ற வீடமைப்புத் திட்ட வீடுகளின் மீது அண்மையில் நடைபெற்ற பொம்மர்த் தாக்குதலினால் 27 வீடுகள் முற்றுகச் சேதமடைந்தன.

முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலினால் சென்ற வருடம் தவராஜா எனும் காவலாளி கொல்லப்பட்டார்.

குருநகர் குடியேற்ற வீடுகளில் இருந்தவர்களை இராணுவத்தினர் வெளியேற்றி வீட்டுத் தாம் இருந்தனர்.

அங்கிருந்த குடியேற்ற வாசிகள் நாவற்குழி வீடமைப்புத் திட்ட வீடுகளில் குடியேறினர்.

தற்போது அவர்கள் அங்கிருந்தும் வெளியேறி நடுத்தெருவில் நிற்கின்றனர்.

இவ்வாறு அவர்மேலும் தெரிவித்தார். (இ–ள)

# ஆயிரக் கணக்கானோர் இளவாலையைக் கடந்து வந்தனர்

— இளவாலைச் செய்தியாளர் —

இளவாலை, ஜூன் 10
மாவிட்டபுரம், கீரிமலை, கருகம்பனை, வடக்கு இளவாலை, பத்தாவத்தை, சித்திரமேழி பொயிட்டி, மாரிசன் கூடல், இளவாலை, காங்கேசன்துறை, வீமன் காமம் ஆகிய பகுதிகளில் )ருந்து 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் இந்த இடம் பெயர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக நமது இளவாலைச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கோயில்கள், பாடசாலைகள், ஒதுக்கிடங்களை நோக்கி மக்கள் ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டிருக்கும் காட்சி மனத்தை உருக்குவதாக இருக்கிறது.

கீரிமலை, பண்டத்தரிப்பு வீதியும் மக்கள் நிறைந்து காணப்படுகிறது.

இளவாலை அன்னமாள் கோவில், பெரியவிளான் யுவானியார் கோவில், பண்டத்தரிப்பு பாத்திமா கோவில், விளான் விநாயகர் கோவில் ஆகியவற்றில் மக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர். (இ–48)

## மட்டக்களப்பு

### விமானப் படைத்தளத்தைச் சுற்றி தடைவலயம்

மட்டக்களப்பு, ஜூன்10
மட்டக்களப்பு விமானப் படைத்தள விஸ்தரிப்பிற்காக சுவீகரிக்கப்பட்ட 500 மீற்றர் காணியைச் சுற்றிவர, விமானப் படையினரால் தடை வலயம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தடை வலயத்தை சுற்றி வர முட்கம்பிகள் போடப்பட்டுள்ளதோடு சுமை தாங்கிச் சந்தி வரையிலிருந்து புதூர் செல்லும் பிரதான பாதையும் மூடப்பட்டுள்ளது.

மேற்படி தடைவலயம் 500 மீற்றர் வரை பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம், விக்னேஸ்வரர் ஆலயம், கண்ணகி அம்மன் ஆலயம் ஆகியவற்றிற்குச் செல்வதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தடைவலயம் காரணமாக வீதி மூடப்பட்டு முட்கம்பிகள் போடப்பட்டுள்ள தால் புதூர் செல்வோர் வீச்சுக்கல்முனை வழியாகவே இனிமேல் செல்லவேண்டும்.

விமானப் படையினரின் ''சென்றிகளும்'' எல்லைகள் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளன. மேலும் அப்பகுதியில் பல கட்டிடங்கள் புதிதாகக் கட்டப்பட்டு விஸ்தரிப்பு நடவடிக்கைகளும் நடைபெற்றுவருகின்றன.

500 மீற்றர் பகுதியில் அடங்கும் தனியாருக்கு சொந்தமான இரு மாடிக் கட்டடமொன்றும் படையினரால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (அ–21)

### மட்டக்களப்பு மாவட்ட வாக்காளர்

மட்டக்களப்பு, ஜூன் 10
1986 இல் திருத்தி அமைக்கப்பட்ட தேர்தல் இடாப்பின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 2 லட்சத்து 9 ஆயிரத்து 926.

பட்டிருப்பு 55,309 வாக்காளர்.

மட்டக்களப்பு 96,981 வாக்காளர்.

கல்குடா 57,636 வாக்காளர். (இ–21)

### வங்கி உத்தியோகத்தர் விசாரணை

மட்டக்களப்பு, ஜூன் 10
மட்டக்களப்பு இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர், கடன் வழங்கு உத்தியோகத்தர் உட்பட நான்கு வங்கி உத்தியோகத்தர்கள் கல்லடி முகாம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

முகாமில் நான்கு மணி நேர உயர்மட்ட விசாரணையின் பின்பு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (இ–21)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# முஸ்லிம்கள் நலன் கருதி மூன்று பிரதேச சபைகள்

மட்டக்களப்பு, ஜூன் 10
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எட்டு உதவி அரச அதிபர் பிரிவுகளிலிருந்தும் முஸ்லிம்களின் நலன் கருதி மேலதிகமாக மூன்று பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் காத்தான்குடி, ஏறாவூர், ஒட்டமாவடி உள்ளூராட்சிப் பிரிவுகளே முஸ்லிம்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

மண்முனை வடக்கு உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு கிராம சபைகளை உள்ளடக்கி மண்முனை பற்று பிரதேச சபை உருவாக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி பட்டின சபை பகுதியை கொண்டதாக காத்தான்குடி பிரதேச சபை உருவாகியுள்ளது.

மேற்படி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள மற்றுமோர் கிராமசபையான சின்ன ஊறணி கிராம சபை மாநகர சபையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் - செங்கலடி உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து குடியிருப்பு, பன்குடாவெளி, வந்தாறுமூலை கிராம சபைகளை உள்ளடக்கியதாக செங்கலடி பற்று பிரதேசசபை அமைகின்றது.

ஏறாவூர் பட்டின பகுதிகளை உள்ளடக்கிய 5 வட்டாரங்கள் ஏறாவூர் பிரதேச சபை ஆகும். இதில் இரு வட்டாரங்கள் தமிழர்களுக்குரியன.

வாழைச்சேனை கோறளைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கிரான், வாழைச்சேனை கிராமசபை பிரிவுகளை வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேசசபை ஆகும்.

ஒட்டமாவடி கிராம சபை பகுதி கோறளை மேற்கு ஒட்டமாவடி பிரதேச சபையாக உருவாக்கப்பட்டுள்ளது.

கோறளை வடக்கு வாகரை உதவி அரச அதிபர் பிரிவு வாகரை கிராமசபை பகுதிகளையுடைய கோறளைவடக்கு வாகரை பிரதேச சபை ஆகும்.

மண்முனை மேற்கு வவுணதீவு உதவிஅரச அதிபர் பிரிவிலுள்ள கன்னன்குடா, ஈச்சந்தீவு கிராம சபைகள் மண்முனை மேற்கு பிரதேச சபை ஆகும்.

மண்முனை தென் - கிழக்கு களுவாஞ்சிக்குடி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள களுவாஞ்சிக்குடி கிராமசபை பகுதி மண்முனை தென் கிழக்கு பிரதேச சபை ஆகும்.

மண்முனை வடமேற்கு பட்டிப்பளை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கொக்கட்டிச்சோலை கிராமசபைப்பகுதி மண்முனை வடமேற்கு பிரதேசசபை ஆகும்.

மண்முனை தென் எருவில் போரதீவுப் பற்று உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள மண்டூர், நவகிரி, பழுகாமம் கிராம சபைகளை உள்ளடக்கியதாக போரதீவு பற்று பிரதேச சபை அமைகின்றது. (இ–21)

### சங்கானையில்

### உயர் வகுப்புள்ள கல்லூரி இல்லாதது பெரும் குறை

வட்டுக்கோட்டை, ஜூன் 10
வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஒரு கேந்திர இடமாக சங்கானை உள்ள போதிலும் இங்கு உயர்தர வகுப்புள்ள கல்லூரி எதுவும் இல்லாதிருப்பது பெரும் வேதனைக்குரிய விடயமாகும். இக் குறையை நீக்க சங்கானை வாழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஆவன செய்ய வேண்டும்.

சங்கானை பொதுசன நூல் நிலையத்தில் நடைபெற்ற கல்வி அபிவிருத்திக் கருத்தரங்கில் தலைமையுரை நிகழ்த்திய இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. மு. தியாகராசா மேற்கண்டவாறு கூறினர்.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த இக் கல்வி அபிவிருத்திக் கருத்தரங்கு திரு. மு. தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. தியாகராசா மேலும் கூறியதாவது:—
சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் ஒரு மகாவித்தியாலயமாக இருந்த போதிலும் இங்கு உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படாமல் இருப்பது பெருங் குறை ஆகும்.

இதனால் இங்குள்ள மாணவர்கள் தூர இடங்களுக்கு பஸ் ஏறிச் சென்று படிக்கவேண்டிய கஷ்டமான நிலை இருந்து வருகின்றது.

இன்றைய கஷ்டமான சூழ்நிலையில் பணத்தையும் நேரத்தையும் வீணாகச் செலவு செய்து பஸ் ஏறிச் சென்று படிக்க முடியாது திரும்பி வர வேண்டிய நிலையும் இருக்கின்றது.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்பை ஆரம்பிக்க சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படி அவர் கூறினர்.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. க. ச. கந்தசாமி உரையாற்றும் போது தென்கிழக்காசியாவிலேயே மிகச் சிறந்த கல்விமான்களைத் தந்த மண் சங்கானை மண்.

ஆனால் இந்த மண்ணில் உயர்தர வகுப்புள்ள கல்லூரி இல்லாதது பெருங்குறை.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்பை ஆரம்பித்து வித்தியாலயத்தின் தரத்தையும் நாம் உயர்த்திக்கொள்ள வேண்டும் என்றார். (இ–161)

### கடனுதவி

யாழ்ப்பாணம், ஜூன்10
கொழும்புத்துறை கிழக்கு சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக சங்கத்தில் ஒன்பது அங்கத்தவர்களுக்கு சுயமுயற்சிக் கடனாக ஐநூறு ரூபா வீதம் வழங்கியுள்ளது.

கோழி வளர்ப்பு, சிறு கைத்தொழில் முயற்சி ஆகியவற்றிற்கு ஊக்கமளிக்கும் முகமாகவே இக் கடனுதவி வழங்கப்பட்டதென்று சங்கத் தலைவர் திரு. செ. கந்தசாமியும், செயலாளர் திரு. இ. விஜயகுமாரும் தெரிவித்தனர். (இ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## வெறிச்சோடிய நிலையில் அச்சுவேலிப் பகுதி

அச்சுவேலி, ஜூன்10
கடந்த சனிக்கிழமை இராணுவம் அச்சுவேலிப் பகுதியில் முகாமிட்டதை அடுத்து அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனிப் பகுதிகள் மக்கள் நடமாட்டமில்லாத சூனியப்பிரதேசம் போன்று காட்சி அளிக்கின்றன.

சனிக்கிழமை அதிகாலை இராணுவத்தின் யாழ்ப்பாண வானொலி அறிவித்தலை அடுத்துப் பொதுமக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி இருந்தனர்.

அதே சமயம் யாழ் குடாநாட்டில் இராணுவ முகாம்களுக்கு அருகில் இருக்கும் கிராமங்களில் இருந்து மக்கள் பெருமளவில் இடம்பெயர்கின்றனர்.

வடமராட்சி, அச்சுவேலிப் பகுதியில் இருந்து பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து மாலிப்பாய், சுன்னாகம், கட்டப்பிராய், யாழ்ப்பாணம், அளவெட்டி, இருபாலைப் பகுதிகளுக்கு வந்துள்ளனர்.

அதே நேரம் சுன்னாகம் உடுவில் பகுதியில் இருக்கும் சில குடும்பங்களும் முன்கூட்டியே இடம் பெயர்கின்றன. (இ–11)

### குடிசைகள் தீக்கிரை

மட்டக்களப்பு, ஜூன்10
மட்டக்களப்புவாகரை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள காட்டுமுறிவு குடியேற்ற வாசிகளின் குடிசைகள் ஆயுதப்படையினரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

காடுகளில் தேன் எடுக்க பகலில் குடியிருப்பாளர்கள் கூட்டாகச் செல்வது வழக்கம்.

தேன் எடுத்து விட்டு மாலையில் குடிசைக்குத் திரும்பிய சமயம் தேடுதலுக்கு வந்த படையினர் குடிசைகள் வரை தீக்கிரையாக்கி இருந்தது தெரியவந்தது.

இந்நிலையில் சுமார் 30 குடும்பங்களை தமது குடிசைகளை இழந்துள்ளன. (இ–21)

# "அரசனுக்கு மேலும் ஓர் ஆண்டவன் அவன் சக்தியை நம்புங்கள்"

கொடிகாமம், ஜூன்10
''தனக்கு மேற்பட்ட அரசன் ஒருவன் இருக்கின்றானென்பதை நாட்டை ஆளும் அரசன் சிந்திக்காமையால் தான் இப்போது இத்துன்பங்கள் சூழ்ந்துகொள்ளுகின்றன.

''ஆண்டவன் படைக்கிறான், அரசன் அழிக்கிறான். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. அரசன் அன்றறுக்க ஆண்டவன் நின்றறுப்பான். மகா வல்லமை மிக்க சக்தியை இறுகப் பிடியுங்கள். உங்கள் துயரம் ஒழிந்துவிடும்''.

நல்லூர் அருள்மிகு காளியம்மன் கோவிலில் அண்மையில் நடைபெற்ற பிரார்த்தனையில் உரையாற்றிய திருமதி வேலாயுதபிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது தெரிவித்ததாவது:

உங்களுக்குள்ள துன்பத்தை எல்லாம் வல்ல இறைவனுகிய அரசனுக்கு முறையிட வந்தீர்கள். இறைவனுடைய மந்திரங்கள் அரசனின் தந்திரங்களான ஆயுதங்களிலும் மகாவல்லமை மிக்கன.

அவன் திருநாமங்களைத் தவறுது உச்சரியுங்கள் துன்பம் அகலும் என்றார். (அ–75)

### மக்கள் முகம்

### கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன்10
புலோலி மேற்கு தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய நடப்பு வருட நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு. ந. தங்கராசா, உப – தலைவர்: திரு. செ. விக்கினேஸ்வரன், செயலாளர். திரு. பொ. இரவிந்திரன், உப செயலாளர்: திரு. சு. நந்தகுமார், தனாதிகாரி: திரு. க. வேலாயுதம், உபதனாதிகாரி: திரு. சி. ஆதித்தன்.

செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் வே. மார்க்கண்டேய. பிள்ளை, க. தங்கராசா, பா. சிவராமன், அ. சீதாராம், மு. நடராசா க. சிவகுமார், பொ. சூரியமூர்த்தி.

உள்ளக கணக்காய்வாளர்: திரு. ச. விசுவநாதன். (இ)

### மா விநியோகம்

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் பாவனையாளர்களுக்கு மா விநியோகம் செய்யப்படுகின்றது.

குடும்பக்காட்ட் வைத்திருப்பவர்கள் தமது கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் தலா 3 கிலோ மாவைப்பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# அகதிகளுக்குச் செய்யும் சேவையே சிறந்த சேவை

### டாக்டர்களுக்குப் பாராட்டு

வட்டுக்கோட்டை, ஜூன் 10
எமது அகதிகள் முகாமில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு வைத்திய பரிசோதனை நடத்தியதோடு இலவசமாக மருந்துகளையும் அன்பளிப்புச் செய்த சிறந்த சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் சார்பிலும் அகதிகள் சார்பிலும் டாக்டர்கள் ரீ. பகீரதன், எமில் அத்தனுசியார் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்கானை பொது நூல் நிலையத்தில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் உப தலைவர் 'விவசாய மன்னன்' வீரசிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பாராட்டுரை வழங்கும் போது தன்னலம் கருதாது சிறந்த சேவை செய்த இவர்கள் இருவருக்கும் இறைவன் அருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை. இவர்கள் நீடுழிவாழ வாழ்த்துகின்றேன் என்றார்.

சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் இணைச் செயலாளர்கள் திரு. க. உபேந்திரன், திரு. எம். கணேஸ் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எமில் அத்தனுசியார், உதவி மாவட்ட ஆளுநர் டாக்டர் ரீ. பகீரதன் ஆகிய இருவரும் வைத்திய பரிசோதனை செய்தபோது அகதிகளிடம் காணப்பட்ட நோய்கள், குறைபாடுகள், ஷெல் அடிச் சத்தத்தினால் ஏற்பட்டுள்ள அதிர்ச்சி – பயம் ஆகியவற்றை தமது பதிலுரையின்போது தெரிவித்தனர். (இ–161)

### முற்றுகையிடக் கோருகிறார் சுப்பிரமணிய சுவாமி

சென்னை, ஜூன், 9
இந்தியக் கடற்படை இலங்கைத் தீவை முற்றுகையிட வேண்டும்.

— இப்படி லோக்தள் (அஜித்சிங் பிரிவு) பொதுச் செயலாளர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். (இ–எ)

### கதி 'த்தம்பி முத்துக்குமாரு

தோற்றம்: 08 – 10 – 1924
மறைவு: 20 – 05 – 1986

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— மனைவி, மக்கள்.

3ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (1415)

# இன்னல் வந்தாலும் நீதி, நியாயத்தைக் கைவிடக் கூடாது

பண்டத்தரிப்பு, ஜூன் 10
எவ்வித இன்னல் வந்தாலும் மனிதன் தன் ஒழுக்கம், கட்டுப்பாடு, நிதி நியாயத்தை கைவிடக்கூடாது–இன்று இங்கு நிகழ்வது அசாதாரண வாழ்வு- நாம் அனுபவிப்பது பயம், பீதி, ஏக்கம்.

பண்டத்தரிப்பு பெரிய விளான் பங்குத் தந்தை ஜெயக்குமார் அடிகள் மேற்கண்டவாறு கூறினர்.

பண்டத்தரிப்பில் முத்தமிழோசை இனிய மாலைப் பொழுது நிகழ்ச்சியை தொடக்கி வைத்து அவர் உரையாற்றினர்.

பண்டத்தரிப்பு விழிப்புக்குழுவினால் இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

விழிப்புக் குழித் தலைவர் திரு. ப. அ. செபரத்தினம் உரையாற்றுகையில் தமது கிராமிய நீதி மன்றம் 164 பிணக்குகளை சமாதானமாகத் தீர்த்து இருபகுதியாரும் மீண்டும் ஒற்றுமையாக வாழச் செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு மதிசுப்பிரமணியம் தமது உரையில் சமுதாயம் இனம் நாடு முன்னேற அங்கு வாழும் மக்கள் ஒழுக்க சீலர்களாக திகழ வேண்டும் என்றார். (இ–120)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கதி 'த்தம்பி முத்துக்குமாரு

தோற்றம்: 08 – 10 – 1924
மறைவு: 20 – 05 – 1986

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— மனைவி, மக்கள்.

3ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (1415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

அன்பு பொழியும் இடம் சுவர்க்கம். மனமே, நீ அன்பில் ஊறி வளர்க.
—சுவாமி சித்பவானந்தர்

உதயன்

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
10.6.1987 த.பெ.இல: – 23

# ஈரானுக்கு ஏவுகணைகளை விற்க வேண்டாம்

## சீனாவிடம் அமெரிக்கா கோரிக்கை

வாஷிங்டன், ஜூன் 9
ஈரானுக்கு ஏவுகணைகளை விற்க வேண்டாம் என்று அமெரிக்கா சீனாவைக் கேட்டுள்ளது.

வளைகுடாவைப் பாதுகாக்க ஈரானுக்கு 43 ''ஸில்க்வோர்ம்'' ரக ஏவுகணைகளை சீனா விற்க இருப்பதாக வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்தே அமெரிக்கா இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றது.

ஏவுகணைகளை விற்கமறுப்பதன் மூலம் வளைகுடாவில் பதற்றத்தையும் மோதலையும் தணிக்க உதவலாம் என்று சீனாவுக்கு அமெரிக்கா கூறியிருக்கின்றது.

இதனிடையில் வெனிஸ் நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஏழு செல்வந்த நாடுகளின் மாநாட்டிலும் வளைகுடாப் பதற்றநிலை பற்றி ஆராயப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது. (இ–எ)

## இந்தியாவின் 8ஆவது ஜனாதிபதி;

# நியமனப் பத்திரங்கள் இன்று முதல் தாக்கல்

புதுடில்லி, ஜூன் 9
இந்தியாவின் 8 ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் பணி இன்று புதன் ஆரம்பமாகின்றது

நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வது இன்று தொடங்கும்.

கடைசித் திகதி: 24–6–1987.

நியமனப் பத்திரங்களை விலக்கிக் கொள்ளும் கடைசித் திகதி இம் மாதம் 26.

ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யுமிடத்து ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 13ஆம் திகதி நடத்தப்படும்.

4,665 உறுப்பினர்கள் இத்தேர்தலில் வாக்களிப்பர். அனைவரும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்.

அதன் விவரம் வருமாறு:–

ராஜ்யசபை உறுப்பினர்கள்; 223

லோக்சபா உறுப்பினர்கள்: 543

மாநிலச் சட்ட சபைகளின் உறுப்பினர்கள்:- 3919.

இந்திய லோக்சபா செயலாளர் நாயகம் தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றுவார்.

புதிய ஜனாதிபதி அடுத்த மாதம் 24ஆம் திகதி பதவி ஏற்பார், (இ–எ)

# அரசியலில் மீண்டும் இறங்க மாட்டேன் என்கிறார் ஷெயில்

புதுடில்லி, ஜூன் 9
நான் மீண்டும் அரசியலில் இறங்க மாட்டேன்.

இந்திய ஜனாதிபதி ஷெயில் சிங் இப்படித் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் மத்தியில் அவர் பேசுகையில் ''எதிர்காலம் பற்றி எவரும் ஒன்றுமே சொல்ல முடியாது'' என்றார்.

திரு. ஷெயில் சிங்கின் பதவிக் காலம் அடுத்த மாதம் நடுப்பகுதியில் முடிவடைகின்றது. (இ–எ)

## வெளி உலகில்

### எகிப்து, சூடான் பாதுகாப்பு உடன்படிக்கை ரத்து

கெய்ரோ, ஜூன் 9
எகிப்துக்கும் சூடானுக்கும் இடையேயான பாதுகாப்பு உடன்படிக்கை ரத்தானது.

இந்த உடன்படிக்கை 1976 இல் சைச்சாத்தானது. அப்போது எகிப்திய ஜனாதிபதியாக அன்வர் சதாத்தும் சூடானின் ஜனாதிபதியாக ஜபார் நிமெய்ரியும் இருந்தனர்.

உடன்படிக்கை ரத்தான விஷயத்தை சூடான் பிரதமர் சாதிக் மஹ்தி கார்ட்டூம் வானொலியில் பேசுகையில் தெரிவித்தார். (இ–எ)

### தீவிரவாதிகள் கைது!

கெய்ரோ, ஜூன் 9
எகிப்தில் 500 க்கும் அதிகமான சமய தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

எகிப்தில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற கொலைமுயற்சிச் சம்பவங்களைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ–எ)

### படகு கவிழ்ந்து 20 பேர் மரணம்

லக்னோ, ஜூன் 9
உத்தரப் பிரதேச மாநிலத்தில் படகு ஒன்று கவிழ்ந்ததில் இருபது பேர் வரையில் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (இ–எ)

### ஆர்ஜன்டீனாவின் தலைநகரம் இடம் மாறுகிறது

புவனர்ஸ்அயர்ஸ் ஜூன்9
ஆர்ஜன் டீனாவின் தலைநகரம் மாறப்போகிறது.

தற்போதையதலைநகரமான புவனர்ஸ் அயர்ஸில் இருந்து ஆயிரம் கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ஒரு இடத்துக்கு இடம்மாற்றம் செய்யப்படுவதை நாடாளுமன்றம் அங்கீகரித்தது.

ஜனாதிபதி ரோல் அல் போன்ஸினின் இந்த யோசனையை 146—17 வாக்குகளினால் நாடாளுமன்றம் அங்கீகரித்தது, (இ–எ)

### பிரிட்டிஷ் தேர்தல் நாளை

லண்டன், ஜூன் 10
பிரிட்டிஷ் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் வியாழன் நடைபெறும்.

கார்டியன் நடத்திய கருத்துக் கணக்கெடுப்பின் படி, ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் 13 புள்ளிகளால் முன்னணியில் நிற்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இரண்டாம் இடத்தைத் தொழிற் கட்சி வகிக்கின்றது. (இ–எ)

## வேதனை தரும் செயல்

இராணுவத் தாக்குதல் காரணமாக குடாநாட்டு மக்கள் இடம் பெயர்வதும், அகதிகளாவதும் சர்வசாதாரணமாகிவிட்டது. வடமராட்சியில் கடந்த மாதம் 26 ஆம் திகதி அரச படைகள் ஆரம்பித்த தாக்குதல்களின் பின்னர் குடாநாட்டுக்கு உள்ளே ஊருக்கு ஊர் இடம் பெயர்வுகள் பெருகி உள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி அடுத்த ஊரில் உள்ளவர்களும் பீதியினால் இடம் பெயர்ந்து வருகிறார்கள்.

உடைமைகளை இழந்து உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அகதிகளாவோர் ஒருபுறம், உடைமைகளையும் உயிர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக, ஆபத்து உண்டாகலாம் என ஊகித்து முன்னெச்சரிக்கையுடன் இடம் பெயர்வோர் மறுபுறம்.

கடந்த இரண்டு நாட்களாக இரண்டாவது ரகத்தினரையே அதிகம் காண முடிந்தது. அவர்கள் குடாநாட்டில் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு இடம் மாறினாலும்— குடிபெயர்ந்தாலும் பரவாயில்லை. வெளிமாவட்டங்களுக்கு இடம் பெயர்கின்றனர்!

இது பெரும் கவலைக்கு உரிய நிலையாகும். நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போவதற்கு ஒப்பானது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் தென் இலங்கையில் வாழ்வது பாதுகாப்பில்லை என்பதை அங்கு ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழர்களில் பெரும்பாலானோர் உணர்ந்தனர், அங்கு தங்கள் உயிருக்கு ஆபத்து எனத் தெரிந்து கொண்டனர். சொந்த மண்ணே தமக்குப் பாதுகாப்பான பிரதேசம் என இங்கு வந்தார்கள். ஆனால் அவர்கள் கூட இப்போது தமது சொந்த மண்ணை ஆபத்தான பிரதேசமாக நினைத்து வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து செல்வது வேதனை தருவதாகும்.

தன்மானம் உள்ள எவனும், எந்த இடர் வரினும் தனது சொந்த மண்ணில் இறப்பதையே பெரும் பேறாகக் கருதுவான். ஆனால் இங்கு பலர் ஆபத்து என்றதும் சொந்த மண்ணைவிட்டு ஓடிவிடத் துடிக்கிறார்கள்.

மனிதன் பிறக்கும்போதே இறப்பதும் நிச்சயமாகிறது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்வு நிச்சயமற்றது. இவ்வாறு எமது மதங்கள் உணர்த்துகின்றன.

மரணம் நிகழ்வதென்பது முன்னர் நிர்ணயித்தபடி தான் என்பதும் மத நம்பிக்கை. மரணம் நிகழவேண்டிய நேரத்தில் நிகழும். முன்னும் வராது; பின்னும் வராது.

அப்படிப் பார்க்கும் போது வல்வையில் இருந்தாலும் சரி, அச்சுவேலியில் இருந்தாலும் சரி, கிளிநொச்சியில் அல்லது வவுனியாவில் இருந்தாலும் சரி, மரணம் வரவேண்டிய நேரத்தில் வந்தே தீரும். ஓர் இடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குப் போவதால் மரணத்திலிருந்து தப்பிவிட முடியும் என்பது அர்த்தமற்றதாகும்.

இன்றைய சூழ்நிலையில் எமது சொந்த மண்ணை விட்டு வேறு இடங்களுக்குப் போவது புத்திசாலித் தனமானதல்ல. பல வேண்டாத விளைவுகளை உண்டாக்கும் என்பதையும் மறந்து விடலாகாது,

சுதந்திரமும் உரிமைகளும் நாம் சும்மா இருக்க எங்கனைத் தேடி வரா. ஏதோ ஒரு விதத்தில் போராடி, முயற்சி செய்து தான் பெற வேண்டும்.

போராட்ட காலத்தில் உயிராபத்து, உடைமைச் சேதம் எனப் பலவித கஷ்டங்கள் வரத்தான் செய்யும். அவற்றைக் கண்டு மனச் சோர்வு அடையக் கூடாது. எதையும் தாங்கும் இதயம் வேண்டும். தீமையையும் நன்மையையும், தோல்வியையும் வெற்றியையும் எதிர்கொள்ளக் கூடிய மனப்பக்குவம் தேவை. அவை ஒன்று மாறி மற்றது சுற்றிச் சுழன்று வரும் என்பதை நாம் உணர்ந்து கொண்டால் அபத்தமான சூழ்நிலையிலும் மனதில் உறுதி பிறக்கும்.

மனதில் உறுதி இல்லாதவர்கள், மற்றவர்கள் செய்கிறார்கள் நாமும் செய்தால் என்ன என்று நினைப்பவர்கள் தான் ஆபத்தைக் கண்டு அஞ்சுவார்கள்; துன்பத்தைக் கண்டு துவள்வார்கள்.

சொந்த மண்ணை விட்டுக் குடிபெயர்வதால் தம்மை அழிவு செய்யக் காத்திருப்போரின் பல சதித் திட்டங்களுக்கு இடம் கொடுத்தவர்களும் ஆவர்.

இதனை நன்கு உணர்ந்து நடக்க வேண்டிய காலம் இது.

# ஸ்ரீலங்காவில் போரிட இந்திய ராணுவத்துக்கு பயிற்சி அளிக்கப்பட்டது

ஸ்ரீலங்கா விமானப் படையிடம் ஆறு சியாமார் செட்டி விமானங்கள் உண்டு. குண்டுகள் போடக்கூடிய விதத்தில் அல்லது 7.62 மெஷின் துப்பாக்கிகள் அல்லது ரொக்கட் பொருத்தப்பட்ட விதத்தில் இவ் விமானங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பெல் 206, 212 ரக 20 ஹெலிக் கொப்டர்கள் ஸ்ரீலங்கா விமானப் படையிடம் உண்டு. இவை சிங்கப்பூரில் இருந்து பெறப்பட்டவை.

இவைகளில் மெஷின் துப்பாக்கிகள், கிறனேட் லோஞ்சர்கள் பொருத்தப்பட்டுள்ளன.

புள் 12 டர்போ பண்டாரக பாரமில்லாத போக்குவரத்து விமானங்கள் ஆறு உண்டு. இவை சீனாவிடமிருந்து பெறப்பட்டவை.

200 கிலோ, 50 கிலோ குண்டுகளை ஏற்றிக் கொண்டு செல்லக்கூடியதாக இவை மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

1, 3, 4, இலக்கம் கொண்ட அணிக்கு போக்குவரத்து விமானவசதிகள் செய்து கொடுக்கப்பட்டு உள்ளன.

சீனன்குடா(திருமலை), மட்டக்களப்பு, பலாலி, கட்டுநாயக்கா, அனுராதபுரம் ஆகியன ஸ்ரீலங்காவின் பிரதான விமானத் தளங்கள்.

இவற்றை விட இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் பயன் படுத்தப்பட்டு, இப்போது புதுப்பிக்கப்பட்டுள்ள சில விமான ஓடு பாதைகள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உண்டு.

திருகோணமலை, காரைநகர், கொழும்பு, தங்காலை, கல்பிட்டிய ஆகிய இடங்களில் ஸ்ரீலங்கா கடற்படை முகாம்கள் இருக்கின்றன.

இந்தத் தளங்களில் பெரிய, கரையோரப் ரோந்துப் படகுகள் உண்டு. துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஆறு அதிவேகத் தாக்குதல் கப்பல்களும் உண்டு.

**1984 இல்**

நிபுணத்துவ வட்டாரங்களின்படி, 1984 ஏப்ரலில் இப்படி ஒரு நேரடி நடவடிக்கைத் திட்டத்தைச் செயற்படுத்தும் சாத்தியக் கூறு இந்தியாவிடம் இருந்தது.

> இந்தியாவின் இராணுவத் தெரிவுகள்- என்ற தலைப்பில் 'இந்து' பத்திரிகையின் மே 30 இதழில் ஒரு செய்திக்கட்டுரை வெளியாகியது.
>
> இச் செய்திக் கட்டுரையை 'இந்து'வின் புதுடில்லி விசேட செய்தியாளர் எழுதி இருந்தார்.
>
> அதன் இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகிறது.

அச்சமயம் இரண்டு படை அணிகளும் ஒரு இயந்திரமயப்படுத்தப்பட்ட பட்டாளப் பிரிவும் ஒதுக்கப்பட்டிருந்தன.

உண்மையிலேயே துருப்புக்கள் கப்பல்களில் ஏற்றப்பட்டும் இருந்தன.

தற்போதைய ஸ்ரீலங்கா படைப்பலத்தைப் பார்க்கும் போது ஆகக் குறைந்தது ஒரு டிவிஷன் படைப் பிரிவு, ஒரு ஆகாயப்படை அணி, இவற்றுக்கு ஆதரவான ஆட்டிலறி, படைவாகனங்கள், பாரம் குறைந்த பிரங்கி வண்டிகள் தேவைப்படும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய இராணுவத்தினருக்கு ஸ்ரீலங்காவினுடையது போன்ற நிலப்பரப்பில் சண்டையிடுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பிரதான விமானப்படைத் தளங்கள் திருவனந்தபுரத்திலும் பெங்களூரிலும் அமைந்துள்ளன.

புதிதாக உருவாக்கப்பட்ட விமானப்படையின் தென் பிராந்தியத் தலைமை அலுவலகம் திருவனந்தபுரத்தில் உண்டு.

பெங்களூர் தளத்தில் ஜகுவார், சலுர் ஆகிய விமானங்கள் அணியுடன் அஜித்ஸ் அணியும் உண்டு.

தென்பகுதிக்கான பிரதான மோதல் தளம் மதுரையில் இனித்தான் தயார் செய்யப்பட வேண்டும்.

தமிழ் நாட்டில் உள்ள சிவில் விமானத் தளங்களில் இருந்தும் விமானங்கள் செயல்படலாம்.

வி/ஸ்டொல் சீஹிரியர்ஸ் ரக விமானங்களை எங்கிருந்தும் பயன்படுத்த முடியும்.

எப்படியாயினும் இந்தியாவை எதிர்நோக்கும் பெரிய பிரச்சினை வழமைக்குமாறாக யாழ்குடா நாட்டில் அதிக உயிர்களைப் பலி எடுத்துக் கொண்டிருக்கும் மோதலுக்கு விரைவான முடிவு ஒன்றைக் காணுவதும், தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுவதுமே.

சரித்திர காலம் தொட்டு நல்லுறவுடன் இருந்து வரும் அயல்நாடு ஒன்றுடன் மனக்கசப்பு ஏற்படாத வகையில் செயற்படுவதே இந்தியாவின் முயற்சியாக இருக்கும். (முற்றும்)

**பொய்யாமொழி**

**குறள்:**

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

**பொருள்:**

தம்முடைய வலிமை இவ்வளவு என்று அறியாமல் ஊக்கத்தால் முனைந்து தொடங்கி இடையில் அதை முடிக்க வகையில்லாமல் அழிந்தவர் பலர்.

# கிளிநொச்சி மாவட்ட அகதிகளுக்கு உதவ ரூ.10லட்சம் திரட்ட முடிவு

## பிரசைகள் குழு நடவடிக்கை

கிளிநொச்சி, ஜூன் 10
கிளிநொச்சி மாவட்ட அகதிகள் நிலையைக்கருத்தில் கொண்டு சுமார் பத்து லட்சம் ரூபா உதவி வழங்குமாறு கிளிநொச்சி பிரசைகள் குழு இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் உள்ள பொதுஸ்தாபனங்களிடம் கோரும். இதில் தற்போது சுமார் ஒன்றேகால் லட்சம் ரூபா கிடைத்துள்ளது.

இப்பணத்தில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் சுமார் ஒரு லட்சத்து எண்ணூற்று ஐம்பது ரூபாவைக் கையளித்துள்ளது.

மரணச் சடங்குகளுக்காக ரூபா 500 வீதம் 90 குடும்பங்களுக்கும்—

ரூபா 300 முதல் 750 வரை காயம் அடைந்தவர்களின் 40 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன.

அடுத்து யாழ். வை. எம். கி. ஏ. கட்டடத்தில் இயங்கும் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் '83' வழங்கிய 15 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள், 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகள் கோணாவிலில் வசித்த செட்டிகுளம் அகதிகளுக்கும் கனகாம்பிகைக் குளம், இராமநாதபுரம் போன்ற இடங்களிலும் உள்ள கிளிநொச்சி நகர அகதிகளுக்கும் வழங்கப்பட்டன.

இத்துடன் றெட்பாணா நிறுவனத்திடம் இருந்து சுமார் பாதிக்கப்பட்ட ஈராயிரம் விவசாயிகளுக்கு விதை நெல்லும்,—

புருட்ஸ் தாபனத்திடம் இருந்து சுண்டிக்குளம், இராமநாதபுரம், உமையாள்புரம், பெரியகுளம், இரணைமடு, விவேகானந்தநகர், கனகாம்பிகைக்குளம், கிருஷ்ணபுரம் ஆகிய இடங்களின் மீனவ குடும்பங்களுக்கு விநியோகிக்க வென சுமார் 64 ஆயிரம் பெறுமதியான மீன்வலைகளும், மீன் பொறிகளும்—

கியூடெக்ஸ் தாபனத்திடம் இருந்து தட்டுவன் கொட்டி, ஆனையிறவு, தாளையடி ஆகிய இடங்களின் 95 மீனவ குடும்பங்களுக்கு விநியோகிக்க

(4 ஆம் பக்கம் பார்க்க

டவர்களின் போக்கைத் தணிய வைக்கக்கூடிய அளவு நிர்ப்பந்தத்தைப் பிரயோகிப்பதே இந்தியாவின் முயற்சியாக

## சத்தியம் வெல்லும்

கடல் வலயத்தின் இருளைக்
கிழித்துத் தம்வறுமை போக்க
படகது 'தூய ஒளி'யில்
பகலினை நாடிச் சென்ற
விடலைகள் முதியவ ரெல்லாம்
வீழ்த்தியே பிணமாய் ஆழுக்
கொடுமையின் சுடலை ஆட்டம்
கொழுந்து விட்டெரிந்த நாளே!

★ ★ ★

செத்தனர் பல்லோர் எங்கள்
செகத்தினை மீட்பதற்காய்
புத்தரும் தருமம் சொன்னார் — அதைப்
புதைத்தனர் ஆட்சியாளர் — இங்கே
சுத்தியும் வாளும் ஏந்திக்
காதகஞ் செய்வோர் வீழ்வார்
சத்தியம் வெல்லும் உங்கள்
சாவிற்கு ஈடு செய்யும்!

— நெடுந்தீவு லக்ஸ்மன் —

(குருநகர் கடற்றொழிலாளர் படுகொலை நினைவு நாள் இன்று. அதனையொட்டி இக் கவிதை பிரசுரமாகிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையான
22 KT தங்க நகைகளை
ஆடர்செய்து பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

# உதயன்

10 06 1987 புதன்கிழமை

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்!
தரமான
✶ தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

# திடீர் ஊரடங்கால் நோயாளர் பாதிப்பு

## யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன்10

அரசின் திடீர் ஊரடங்கு உத்தரவால் பல நோயாளிகள், காயம் அடைந்தோர் முதலுதவி வைத்திய வசதியின்றி இறக்கின்றனர். ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படும்போது ஆஸ்பத்திரி போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு விதிவிலக்கும், பாஸ்களும் வழங்கப்பட வேண்டும்.

சர்வதேச நெறிமுறைகளுக்கு மாறாக ஆஸ்பத்திரி மீதும், அம்புலன்ஸ் மீதும் இராணுவம் தாக்குதல் நடத்துகிறது.

இவ்வாறு யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இராணுவத்தினர் திடீர் திடீரென ஊரடங்கைப் பிறப்பிக்கின்றனர்.

இதனால் நோயாளர்களையும், காயப்பட்டவர்களையும் சிகிச்சைக்கு யாழ்ப்பாணம் கொண்டு வர முடியாதுள்ளது.

மீறிக் கொண்டுவந்தாலும் டாக்டர்கள் ஊரடங்கு நேரத்தில் வர முடியாதுள்ளது.

தாதிகளும் பயந்து பயந்து வேலை செய்ய வேண்டி உள்ளது.

அரசின் திடீர் ஊரடங்கால் வாட்டிலுள்ள நோயாளிகளுக்கு உணவு கொடுக்க முடியாதுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி திடீர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் அன்று காலை, மதிய உணவுகள் நோயாளிகளுக்கு வழங்கப்படவில்லை.

மாலை 4 மணி அளவிலேயே உணவு வழங்கப்பட்டது.

வடமராட்சி அசம்பாவிதங்களில் ஒருவைத்தியசாலை ஊழியரும் கைதாகியுள்ளார்.

பல ஊழியர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

இவ்வாறு பணிப்பாளர் கூறினார். [இ-ள]

## இந்து மகளிர் கல்லூரியில் ஆங்கிலவகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன்10

வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றுவந்த பல்கலைகழக ஆரம்ப ஆங்கில வகுப்புகள் இன்று முதல் வாரநாட்களில் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளன.

வார நாட்களில் பிற்பகல் 2 மணி முதல் 4-30 மணி வரை இவ் வகுப்புக்கள் நடைபெறும் என்று யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-ள)

## ராணுவத்தால் பணயம் பிடிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட அனுபவம்

காங்கேசன்துறை, ஜூன் 10

வீமன்காமத்தில் 7 பொதுமக்கள் இராணுவத்தினரால் பணயம் வைக்கப்பட்டு பின்னர் வயோதிபர்கள் விடுவிக்கப்பட்டனர். இளம் வயதினர் இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டனர்.

திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் வீமன்காமம் டச் ரோட்டில் இராணுவத்தினரிடம் அகப்பட்டுக்கொண்ட ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர் ஒருவர் இதனைத் தெரிவித்தார். பணயம் வைக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர் ஆவார்.

இவர் மேலும் கூறியதாவது:-

ஊரடங்கு அறிவித்தலை அடுத்து வீமன்காமத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை புறப்பட்ட நான் திங்கட்கிழமை ஆடு, மாடுகளைப் பார்ப்பதற்காக வீடு சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தேன்.

டச் ரோட்டில் இராணுவத்தினர் என்னை மறித்தனர்.

என்னுடன் மேலும் 6 பொதுமக்கள் இராணுவத்திடம் அகப்பட்டு இருந்தனர்.

எங்களைப் பணயமாக வைத்து வறுத்தலைவிளான் பக்கமாக இராணுவத்தினர் முன்னேறினர்.

ஒவ்வொரு இடமாகத் தங்கியிருந்து புறப்பட்டுச் சென்ற இராணுவம் ''போராளிகள் எங்கு இருக்கிறார்கள்?'' என விசாரித்தபடி சென்றனர்.

''இங்கு அவர்கள் இல்லை'' என நாம் கூறினோம்.

பின்னர் வறுத்தலைவிளான் வரை சென்ற இராணுவம் வயோதிபர்களான என்னையும் வேறு இருவரையும் பகல் 12.30 மணி அளவில் விடுவித்தனர். இளம் வயதினரை அவர்கள் கூட்டிச் சென்றனர்.

திரும்பி வரும்போது டச் ரோட்டில் பல சடலங்கள் அரைகுறையாக எரிந்த நிலையில் காணப்பட்டன.

அப்பகுதி எங்கும் துப்பாக்கிச் சத்தங்களும், குண்டு வெடிப்புச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-68)

## கிளிநொச்சி---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வென 95 ஆயிரம் பெறுமதியான மீன்வலைகளும் வழங்கப்படும்.

அத்துடன் றெட்பானா நிறுவனம் வழங்கிய சுமார் 25 ஆயிரம் பெறுமதியான பால் மா கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அகதிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

தற்போது செயற்கைக் குழந்தைகள் நிதியம் வழங்கிய சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவும், பால்மாவும் விநியோக வேலைகள் நடைபெறுகின்றன.

மேலும் எரி பொருள் விநியோகம் சம்பந்தமாக இராணுவ அதிகாரிகள், மற்றும் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

இரண்டு ப. நோ. கூ. சங்கங்கள் மூலமும் மூன்று தனியார் எரி பொருள் விற்பனர் மூலமும் எரி பொருள் விநியோகிக்க ஒவ்வொன்றுக்கும் கிழமைக்கு 6,600 லீற்றர் மண்எண்ணெய், 6,600 லீற்றர் டீசல், 1,050 லீற்றர் பெற்றோல் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன. (இ-76)

## வடமராட்சி ஒரு...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு இலக்கானது-

அரசுப் படையினர் பட்டினத்துக்குள் நுழைவதற்கு முன்னர் வீதிகள் வழியே ஹெலிக் கொப்டர் தாக்குதல் நடைபெற்றது.

பெரும்பாலான வீடுகள் சேதமடைந்தன. மின், தண்ணீர் விநியோகம் துண்டிக்கப்பட்டன.

சுமார் நான்காயிரம் தமிழ் இளைஞர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுஇருப்பது இலங்கை அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இடையே இணக்கம் காணுவதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கப் போகின்றது.

இப்படி சண்டே டைம்ஸ் செய்தி தெரிவித்தது. (இ-ள)

### வெள்ளவத்தையில் 5 தமிழர் கைது

கொழும்பு, ஜூன் 10

கடந்த ஞாயிறு வெள்ளவத்தைப் பொலீஸார் ஐந்து தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

ஐந்து பேரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

அனைவரும் வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

வெள்ளவத்தை ரயில் நிலையத்தை புகைப் படம் பிடித்தார்கள் என்ற சந்தேகத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். (இ-ள)

## சந்தர்ப்பவாத சக்திகளை இனம்காண கோருகிறது ஈரோஸ்

யாழ்ப்பாணம், ஜூன்10

பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ள மக்களிடம் எமது அமைப்பின் பெயரை தவறாக சில சக்திகள் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. இது வன்மையான கண்டனத்திற்குரியதாகும்வியாபாரம் நோக்கம் கொண்ட சந்தர்ப்பவாத சக்திகளை இனம் காணப் பொது மக்கள் தம்மாலான ஒத்துழைப்பு நல்க வேண்டுமென எமது அமைப்பு எதிர்பார்க்கிறது.

—இப்படி ஈரோஸ் இயக்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அனைத்து மக்களையும் குடாநாட்டிலிருந்து அடித்து விரட்டி மக்கள் நடமாட்டமற்ற சூனியப் பிரதேசமாக்க ஸ்ரீலங்கா அரசு மூர்க்கமாக முனைந்து நிற்கிறது.

பாலஸ்தீனியர்களை தமது மண்ணிலிருந்து வெளியேற்றி பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்த மொசாட்டின் நரித் தந்திரமே இத்திட்டமாகும்.

—இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

தமிழ் நாட்டில்

## இலங்கைத் தமிழர் தினம் அனுஷ்டிக்க முடிவு

திருச்சி, ஜூன் 10

இந்திரா காங்கிரஸின் தமிழ்நாடு மாநிலக் கமிட்டி இம்மாதம் 22ஆம் திகதியை இலங்கைத் தமிழர் நாளாக அனுஷ்டிக்க இருக்கிறது.

திருச்சியில் கடந்த திங்கள் நடந்த கமிட்டிக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டத்துக்கு கமிட்டித் தலைவர் எம். பழனியாண்டி தலைமை வகித்தார்.

இந்திரா காங்கிரஸ் எம். பிக்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பிரதமரின் இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு ஒருகோடி ரூபாவைச் சேகரித்து வழங்குவது என்றும் கமிட்டி தீர்மானித்துள்ளது என்ற தகவலையும் திரு. பழனியாண்டி வெளியிட்டார்.

தமிழ்நாட்டு பள்ளி ஆசிரியர்கள் சம்மேளனம், உறுப்பினர்களின் ஒருநாள் சம்பளத்தை இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு வழங்குவது என்று தீர்மானித்தது. (இ-ள)

## இளைப்பாறிய ஆசிரியர் ஷெல்லுக்குப் பலி!

காங்கேசன்துறை, ஜூன் 10

அளவெட்டி, தெல்லிப்பழைப்பகுதியில் வீழ்ந்த ஷெல்கள் காரணமாக இளைப்பாறிய ஆசிரியர் ஒருவர் மரணமானார்.

ஆலயம், வீடுகள் என்பன சேதமடைந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

ஞாயிற்றுக் கிழமை காங்கேசன் துறை, மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது இந்த ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியர் நாகரத்தினமே ஷெல்லுக்குப் பலியானவர் ஆவார்.

கொல்லங் கலட்டியிலிருந்து இடம் பெயர்ந்து அளவெட்டிக்குச் சென்ற சமயம் கேணிக்கரை வைரவர் ஆலயத்திற் கருகில் ஷெல் தாக்கி இவர் மரணமானார்.

இவருக்கு அருகில் சென்று கொண்டிருந்த நாராயணசாமி ஸ்ரீதரன் என்பவர் முகத்தில் காயத்திற்கு உள்ளானார்.

தெல்லிப்பழை தோதரை அம்மன் ஆலய ஒழுங்கைப்பகுதியிலும் பல ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

அங்கு ஆலயம் ஒன்றும், சில வீடுகளும் சேதமடைந்தன. (இ-68-120)

## இராணுவத்----

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

நேற்று எவ்வித அறிவித்தலுமின்றி திடீரென பின்நோக்கிச் சென்றமை அப்பகுதி மக்களுக்கு அதிர்ச்சியுடன் கூடிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்பகுதியில் கடந்த சனிக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு இன்று வரை தளர்த்தப்பட்டதாகவோ அல்லது தொடர்வதாகவோ அறிவிக்கப்படவில்லை.

மாவிட்டபுரத்தில் நிலை கொண்டிருக்கும் படையினர் அரசடிக்கு அப்பால் தெல்லிப்பளையை நோக்கியும் -

கட்டுவன், காங்கேசன் துறை, குரும்பசிட்டி முகாம்களில் இருந்து வெளியேயும் -

நேற்று முன்னேறமுயன்றபோது அவர்கள் மீது புலிகள் கடும் தாக்குதல் நடத்தி [illegible] செய்தனர்,

கொத்தியாலடி சுடலைப் பகுதியிலும்மோதல்கள் இடம்பெற்றன.

கீரிமலை, கொல்லங்கலட்டிப் பகுதிகளிலும் போராளிகள் எதிர்த்தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

நேற்று இராணுவ முகாம்களிலிருந்து பல பகுதிகளுக்கும் ஷெல்கள் ஏவப்பட்டுக் கொண்டிருந்தன.

ஷெல் தாக்கி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், மற்றும் சில சுடைகளும் சேதமடைந்தன, (உ-68-119-10)

## புதுடில்லி -----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டில்லி வருமாறு பிரதமர் காந்தி அழைத்து இருக்கின்றார்.

இது தொடர்பாக தமிழகஅரசின் தலைமைச் செயலாளர் ஏ. பத்மநாதன் நேற்றே புதுடில்லி [illegible] [உ-ள]

## திங்கள் இரவு இடம் பெற்ற பீரங்கித் தாக்குதல்

வட்டுக்கோட்டை, ஜூன் 10

திங்கட்கிழமை இரவு கீரிமலை, மாதகல், திருவடிநிலை, காரைநகர் கடற்பகுதிகளில் இருந்து கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர்.

இதனால் பீதியடைந்த பொதுமக்கள் இரவோடு இரவாக லொறிகள், சைக்கிள்கள், கார்கள் மூலமும் கால்நடையாகவும் இடம் பெயர்ந்து சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, சங்கானை, அராலி, சங்கரத்தை முதலிய இடங்களை வந்து அடைந்தனர்.

இளவாலை, பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, சுழிபுரம், திருவடிநிலை, பொன்னாலை, மூளாய் ஆகிய இடங்களில் உள்ளவர்களே இடம் பெயர்ந்துள்ளனர். (இ-161)

## யாழ்ப்பாணத்தில் உணவு தட்டுப்பாடு இல்லையாம்

கொழும்பு, ஜூன் 10

யாழ். குடா நாட்டில் உணவுத் தட்டுப்பாடு இல்லையாம்.

இப்படி கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்து உள்ளது.

சங்கத் தலைவரும் செயலாளரும் யாழ்பயணத்தை மேற்கொண்டபோது இதனை அறிந்து கொண்டனர் என்று இலங்கை வானொலி நேற்று அறிவித்தது. (இ-ள)

## தஞ்சாவூரில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை அறிவித்தது.

இலங்கைப் பிரச்சினையில் மேலும் தலையீடுகள் இடம் பெறலாம் என்பதை இந்த நடவடிக்கைகள் கோடிட்டுக் காட்டுவதாகவும் அச் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது..

-இப்படி இலங்கை வானொலி மேலும் தெரிவித்தது.

தென் இந்தியக் கரையில் இருந்து 93 கிலோ மீட்டர் தூரத்தில் தஞ்சாவூர் உள்ளது. (உ-ள)

## சார்க்கில் . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

உணவுப் பொருள்களை யாழ் அனுப்புவதற்கு இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு இணங்கும் என்று அவ் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. (-ள)

## மந்திகை நோயாளர் 32 பேர் யாழ் வரவு

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடமராட்சியில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலின் போது காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த நோயாளர்களில் 32 பேர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

சிறுவர்கள், பெண்கள் உட்பட அனைத்து நோயாளர்களும் வடமராட்சி பிரதேச போக்குவரத்துச் சபை மூலம் கொடிகாமம் முள்ளி இராணுவ முகாம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டனர்.

மேலும் பல நோயாளர்கள் அங்கு மருந்து வசதி இன்றி கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## சேதமுற்ற வடிசாலையில் சாராயம் குடித்த சிலர் மரணம்?

வல்வெட்டித்துறை, ஜூன் 10

பொம்மர் தாக்குதலால் சேதம் அடைந்த அரச சாராய வடிசாலையில் இருந்து சாராயம் எடுத்துக் குடித்தவர்களில் சிலர் மரணம் அடைந்துள்ளனர் என்று அஞ்சப்படுகிறது.

பலர் சுகவீனமடைந்த நிலையில் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திக்கம் பனம்பொருள் கூட்டுத்தாபனத்துக் குச் சொந்தமானது இந்த வடிசாலை-

கடந்த 26ஆம் 27 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதல்களால் இது சேதம் அடைந்திருந்தது.

சேதமடைந்து கைவிடப்பட்ட நிலையில் உள்ள இந்த சாராய வடிசாலைக்குச் சென்று பலர் சாராயத்தை பாத்திரங்களில் அள்ளி கலப்பின்றியே குடித்தனர் என்று கூறப்படுகிறது.

குண்டு வீச்சினால் சாராயம் நச்சுத்தன்மை அடைந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (இ-160)

## பன்னாலையில் விழுந்த ஷெல்லுக்கு மூவர் பலி

காங்கேசன்துறை, ஜூன் 10

பன்னாலை சங்கக் கடைப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணி அளவில் பல ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. ஒரு பெண் உட்பட மூவர் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர்.

பன்னாலையிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் பலர் தமது வீடுகளை பார்வையிடவும், தோட்டங்கள், கால்நடைகளைப் பார்வையிடவும் சென்றபோதே இச் சம்பவம் நடந்தது.

இறந்தவர்களில் ஒருவர் சுப்பிரமணியம் கந்தசாமி (வயது 55).

இவரது மகன் கந்தசாமி மாரிமுத்து (வயது 16) இச்சம்பவத்தில் காயம் அடைந்து யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இறந்தவரும் அவரது மகனும், தெல்லிப்பளையில் உள்ள தமது வீட்டைப் பார்த்துவிட்டு சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த சமயம் ஷெல் தாக்குதலுக்கு உள்ளானார்கள். (இ-10-68)

## திருப்பலி

யாழ்ப்பாணம், ஜூன் 10

மண்டைதீவு கடலில் வைத்து கொலைசெய்யப்பட்ட 31 குருநகரைச் சேர்ந்த மீனவர்களின் முதலாண்டு நினைவு தினம் இன்று. இவர்களின் ஆத்ம சாந்திக்காக குருநகர் புனிதயாகப்பர் ஆலயத்தில் இன்றுகாலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்று பங்குத் தந்தை அருட் திரு பீற்றர் துரைரட்ணம் தெரிவித்துள்ளார். (உ-ள)

## செயலக ஊழியர் வரவு குறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 10

நேற்றும் யாழ் செயலகத்தில் ஊழியர் வரவு குறைவாகவே காணப்பட்டது.

அரசின் திடீர் ஊரடங்கு உத்தரவும், வடமராட்சிப் பகுதி இராணுவ நடவடிக்கைகளுமே இதற்குக் காரணம் என செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-ள)

## இந்தியாவுடன் - - -

(1 ஆம் பக்கம் பார்க்க)

றுத்தான் முதல் தடவையாக திரு. ஜெயவர்த்தனா பேசினார்.

திரு. ஜெயவர்த்தனா மேலும் சொன்னதாவது:-

மக்கள் இந்தியாவின் செயலுக்கு பதில் நடவடிக்கை எதிலும் ஈடுபடக் கூடாது.

நாம் அஹிம்சை, உண்மை அடிப்படையில் செயலாற்ற வேண்டும்.

மகாத்மா காந்தியும் நேருஜியும் இந்தியாவை வன்செயலிலும் குரோதத்திலும் கட்டி எழுப்பவில்லை.

நான் புத்தபகவான், மகாத்மா காந்தி ஆகியோரின் போதனைகளின் படியே நடந்து வருகின்றேன்.

புத்தபகவான், காந்தி அடிகள் இந்தியாவின் தவப்புதல்வர்கள். அவர்களின் போதனைகளை இந்தியாவும் தமிழ்நாடும் எப்போதோமறந்து விட்டன; மதிப்பதும் இல்லை.

இந்திய அரசும் தமிழக அரசும் வன்செயலின் பாதையில் இருந்து விலகிச் செல்ல வேண்டும். இதை அவர்கள் எண்ணத்திலும் செயலிலும் காட்டவேண்டும்.

ஸ்ரீ லங்கா 20 தடவைகள் வெளிநாடுகளினால் ஆக்கிரமிக்கப்பட்டது.

16 தடவைகள் இந்தியாவினால் ஆக்கிரமிக்கப்பட்டது. 4 தடவைகள் தூர கிழக்கு, மேற்கு நாடுகளினால் ஆக்கிரமிக்கப்பட்டன.

கடந்த 4 ஆம் திகதி இந்திய விமானங்கள் சில மணி நேரம் நடத்திய ஆக்கிரமிப்பு 21 ஆவது தடவையாகும்.

ஸ்ரீ லங்காவின் 2,500 ஆண்டு கால சரித்திரத்தில் 715 ஆண்டுகள் தான் நாடு வெளிநாட்டவரின் கைகளில் இருந்தது.

உணவுப் பொருள்களை யாழ் மக்களுக்கு கொண்டு வந்து விநியோகிப்பது பற்றி நான் இந்தியாவுக்கு செய்தி ஒன்றை அனுப்பி இருந்தேன். அந்த நேரத்தில் இந்த ஆக்கிரமிப்புக்கு என்ன தேவை ஏற்பட்டது?

1967 செப்டம்பரில் இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்டபோது இரண்டு கப்பல்களில் 18 ஆயிரம் மெட்ரிக்தொன்அரிசியை நாம் அனுப்பினோம். அப்போது நாம் அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொண்டு இருந்தோம்.

இலங்கைக்கு வந்தஅப்போதைய பிரதமர் இந்திரா காந்தி இந்தச் செயலை மனதாரப் பாராட்டினார், இதை நான் நினைவுபடுத்துகின்றேன்.

-இப்படி திரு. ஜெயவர்த்தனா தெரிவித்தார். (உ-ள)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 10-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Wednesday June 10, 1987 Registered as a Newspaper at the General Post office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org